8th November 1966]

கனம் திரு ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லே. இந்தச் சங்கங்களே முன் ஃந்து வசூல் செய்யும்போது, இரண்டு தவணைகளில் வாங்கும் முறையில் இருக்கவேண்டும் என்று இருக்கிறது. மத்திய பாங்கிலிருந்து தொகை கொடுப்பார்கள். அதை வைத்துக்கொண்டு அந்த ஸ்டோர்கள் தவணை முறையில் வசூல் செய்கின்றன.

திரு. கோ. சி. மணி : மளிகைக் கடைகள் போன்றவைகள், அரசாங்கத்தின் மூலம் வினியோகிக்கப்படும் நிர்ணய விலைப் பண்டங்களைப் பொருத்த வரையில் அனுபவமும், நீண்ட நாட்களாக உள்ளதுமான கடைகளுக்கு மட்டும்தான் அந்தப் பொருள்கள் கொடுக்கப்படும் என்ற முறை வைத்திருக்கிருர்கள். தற்போது கூட்டுறவு முறையில் தொழிலாளர்களுக்காக நடத்தப்படும் பண்டகசாலைகளுக்கும் அரசாங்கத்தின் மூலம் வினியோகிக்கும் முன் அனுபவமில்லாவிட்டாலும் பொருள்களைக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இந்தச் சங்கங்களை ரிஜிஸ்டர் செய்து ஆரம்பித்தால் தேவையான பொருள்களைக் கொடுக்கவேண்டும் என்பதுதான் அடிப்படைக் கருத்து.

Co-operative Department

* 491 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal to reorganise the administration of the Co-operative Department in the State; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) & (*b*) A statement[a] is placed on the table of the House.

நீதித்துறை அதிகாரிகள்

* 492 கேள்வி.—திரு. செ. மாதவன் : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நீதித்துறையில் பணிபுரியும் மாவட்ட நீதிபதி, துணை நீதிபதி, மாவட்ட முன்சீப், மாஜிஸ்ட்ரேட்டுகள் ஆகியோருக்கு ஊதிய உயர்வும், வீட்டு வசதியும் கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : மாவட்ட நீதிபதிகள், முதல் வகுப்பு கூட்டு மாஜிஸ்ட்ரேட்டு, சப்-மாஜிஸ்ட்ரேட்டுகள் நீங்கலாக நீதித்துறை அதிகாரிகளின் சம்பளத்தை உயர்த்துவது பற்றி தலைமை நீதிபதிகள் மாநாட்டில் வெளியிடப்பட்ட கருத்துக்கள் பரிசிலனை செய்யப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகைக்கு விடுதல்—வாடகைக் கட்டுப்பாட்டுச், சட்டத்தின் கீழ் தமிழ்நாடு இட வசதி கட்டுப்பாடு

---

a Printed as Appendix V on pages 722–723.

[8th November 1966

அதிகாரி எடுத்துக்கொண்டுள்ள விடுகளில் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள விடுகளை, சென்னை நகரில் உள்ள நீதித்துறை அதிகாரிகளுக்கு மட்டும் அளிப்பதற்காகத் தனியே ஒதுக்கி வைப்பதும் ஆலோசனையில் இருந்து வருகின்றது.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, இந்த ஜில்லா முன்சிஃப் அல்லது மாஜிஸ்ட்ரேட் ஆகியவர்கள் நகரப்பகுதிகளிலே அல்லது மேஜர் பஞ்சாயத்து இடங்களிலே இருக்கும்போது வாடகை விடுகளில் இருக்கிறார்கள் பெரும் பகுதிகளில். தனியார் விட்டில் இருக்கிற காரணத்தினால் அவர்களுடைய தலையீடு காரணமாக நீதியில் தவறி விட்டார்களோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அப்படி இருப்பதால் நீதிபதிகள் நிச்சயமாக அரசாங்கத்தின் கட்டடத்தில்தான் இருக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : கட்டடம் கட்டவேண்டுமென்று சிபாரிசு இருக்கிறது. எமர்ஜென்ஸியை முன்னிட்டு கட்டடங்கள் கட்டுவதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. நான் முக்கிய கோள்விகளுக்குப் பதில் சொன்னது போல, ஆங்காங்கு இருக்கின்ற ரெண்ட் கன்ட்ரோலர்கள் போலீஸ் ஆஃபீஸர்களுக்கு எப்படி ப்ரையாரிட்டி வைத்துக் கொடுக்கிறோமோ அதைப்போலக் கொடுக்கவேண்டும் என்பது பரிசிலனையில் இருக்கிறது. கருத்துத் தெரிவித்துக்கொள்ள அது ஹைகோர்ட்டு அனுப்பப் பட்டிருக்கிறது.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, உயர்நீதி மன்ற நீதிபதிகளின் சம்பளம் அலவன்ஸ் எல்லாவற்றையும் உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை மத்திய சர்க்காரினால் பரிசிலனை செய்யப்பட்டு மாநில சர்க்காருக்கு யோசனை கூறப்பட்டிருக்கிறதா ? பம்பாய் ராஜ்யத்தில் சம்பளம் போதாது என்று ஒரு உயர் நீதி மன்ற நீதிபதி ராஜினமா செய்து அதன் பிறகு சம்பளத்தை உயர்த்த வேண்டிய நிலைமை ஏற்பட்டதை நம் ராஜ்ய அரசாங்கம் பரிசீலித்ததா ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : The pay scales of all posts under this Government were revised only in 1960 consequent on the recommendations of the Pay Commission. In 1960, the scale of pay for District Judges was raised to Rs. 1,100—50—1,300—60—1,600—100/2—1,800 and consequent on this, their starting pay has been raised from Rs. 1,000 to Rs. 1,100 whereas the starting pay for an I.A.S. officer in the senior time-scale is only Rs. 900 per mensem. Therefore, members of the State Higher Judicial Service in our State are already allowed to draw pay equal to the senior time-scale of the I.A.S. with a higher start in the minimum of the scale prescribed for them.

8th November 1966]

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி மாவட்ட நீதிபதிகள் பற்றி அல்ல. உயர்நீதி மன்ற நீதிபதிகள் பற்றி மத்திய சர்க்காரில் பரிசீலனை செய்யப்பட்டு மாநில சர்க்கார்களுக்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டதா? இந்தப் பிரச்னையில் பம்பாய் நீதிபதி ஒருவர் ராஜினாமா செய்திருக்கிறார். நம் உயர்நீதி மன்ற நீதிபதிகளின் சம்பளத்தை உயர்த்துவதுபற்றி அரசாங்கம் பரிசீலித்ததா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, சப்-மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கெல்லாம் சம்பள உயர்வு அளிப்பது பற்றிக் கேட்ட சமயத்தில் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ், சப்-ஜட்ஜ் ஆகியவர்களுக்குத்தான் உயர்த்துவது பற்றிப் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். அண்மையில் சப்-மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு பதவி உயர்வு கொடுத்திருக்கிறார்கள், கெஜெட்டெட் போஸ்ட் ஆக்கியிருக்கிறார்கள். அதற்கு உரிய சம்பளத்தைக் கொடுக்காமல் பதவியை மட்டும் உயர்த்தியிருக்கிறார்களே, அது நியாயமா? அதற்கு உரிய சம்பள விகிதத்தைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அதற்குத் தனிக்கேள்வி வேண்டும்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த மாவட்ட முன்சீப், மாஜிஸ்ட்ரேட் எல்லோருக்கும் உயர்த்துவதுபற்றிப் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். இந்த மன்றத்திலே கூட ஏற்கெனவே பரிசீலிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மாஜிஸ்ட்ரேட்டுகளைப் பொருத்த வரையில் பரிசீலித்து கெஜடெட் ராங்க்காக உயர்த்தியிருக்கிறார்கள். அவர்களுடைய சம்பள விகிதத்தையும் உயர்த்த அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பதவி உயர்வுக்கும் சம்பளத்திற்கும் சம்பந்தம் இல்லை. கெஜெடெட் உத்தியோகஸ்தர்கள் ஆவதே பெரிய விஷயம். பொதுவாக எல்லா அரசாங்க உத்தியோகஸ்தர்களின் சம்பளம்பற்றியும் பரிசீலித்து முடிவுக்கு வந்திருக்கிறது. அப்போதைக்கப்போது துண்டு துண்டாக இதெல்லாம் எடுத்துக் கொள்வதில்லை.

திரு. செ. மாதவன் : கனம் தலைவர் அவர்களே, சம்பளத்திற்கும் பதவி உயர்வுக்கும் சம்பந்தம் இல்லை என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இவர்கள் விஷயத்தில் இரண்டு ஆண்டுகள் அட்வகேட்டாக இருந்தால்தான் மாஜிஸ்டிரேட் போஸ்டுக்கு நியமிக்கப்படுவார்கள். இவர்களுக்கு பிரமோஷனும் லிமிடெட் தான். அதுவும் கனம் முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். டிஸ்ட்ரிக்ட் முன்சீப் போஸ்டுக்கு லிமிடெட் ஸீட்கள் தான் அலாட் செய்கிறார்கள். அப்படிப்பட்ட கெஜடெட் உத்தியோகத்திற்கு

[8th November 1966

அடிப்படைச் சம்பளம் ரூ. 200-ஆக இருக்கிறது. ஆகவே, இதை டிஸ்ட்ரிக்ட் முன்சீப் லெவலுக்கு உயர்த்துவது பற்றிக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் பரிசிலிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தற்பொழுது அம்மாதிரி ஒன்றும் உத்தேசம் இல்லை.

குளச்சல் துறைமுகம்

* 493 கேள்வி.—திரு. ஏ. சுவாமிதாஸ்: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் எந்தெந்த துறைமுகங்களில் உணவு இறக்குமதி செய்யப்படுகிறது ?

(இ) குளச்சல் துறைமுகத்தையும் உணவு இறக்குமதிக்குப் பயன்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

(உ) ஆம் எனில், அதை விரிவுபடுத்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: (a) So far as Minor Ports are concerned, foodgrains are imported at Tuticorin port only.

(b) & (c) Import of foodgrains through Colachel Port could be considered only after the development works proposed for the port during the Fourth Plan period are completed.

பலதார மணத்தடை

* 494 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) முஸ்லீம் மதத்தினரின் பலதார மணத்தடைச் சட்டம் செய்ய மத்திய அரசு, மாநில அரசுக்கு இந்த ஆண்டில் கருத்துக்கள் ஏதேனும் கேட்டிருந்தார்களா ?

(இ) ஆம் எனில், அதைப்பற்றி அரசு தெரிவித்த கருத்து என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) ஆம்.

(இ) இது குறித்துப் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது.

திரு. எஸ். ஜே. ராமசாமி: இது குறித்து மத்திய அரசு கேட்டிருந்த தகவல்களுக்கு இந்த அரசாங்கம் என்ன செய்திருக்கிறது ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: The Commissioner of Police, Government Pleader, Registrar, High Court and Secretary, Bar Council, have been addressed and their replies are awaited.